DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
NANNILAM.

**Crmp. No.2179/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | PW1 | Caste | : | |
| Name | : | சாரங்கபாணி | Age | : | 52 |
| Father's Name | : | ரத்தினம் | Occupation | : | வியாபாரம் |
| Village | : | கொல்லுமாங்குடி | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 07th day of February 2023.

07.02.2023

**முதல் விசாரணை** :

நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லி எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**கடந்த 13.04.2022- ந் தேதியிட்ட Axis வங்கி சென்னை வடபழனி கிளையில் மாற்றத்தக்க வகையில் 003110 என்ற எண் கொண்ட ரூ.78,00,000/- த்திற்கு எதிரி எனது பெயருக்கு வழங்கிய காசோலை அசல் ம.சா.ஆ. 01 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி காசோலையை நான் கணக்கு வைத்திருக்கும் பஞ்சாப் நேஷனல் வங்கி கொல்லுமாங்குடி கிளையில் கலெக்சனுக்கு செலுத்தினேன். தொகை அதிகபட்சம் என்பதால் அங்கிருந்து மயிலாடுதுறை கிளைக்கு அனுப்பப்பட்டது. **(கடந்த 20.04.2022- ந் தேதியிட்ட பஞ்சாப் நேஷனல் வங்கி மயிலாடுதுறை கிளையில் நான் கலெக்சனுக்கு செலுத்திய காசோலை பொறுத்து எதிரியின் வங்கி கணக்கில் "(Funds**

**insufficient)" என்ற குறிப்புடன் எனக்கு வழங்கப்பட்ட ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ. 02 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னிட்டு நான் எதிரியை கேட்டபோது மறுமுறை கலெக்சனுக்கு செலுத்துமாறு கூறினார். நான் கடந்த 11.05.2022-ந் தேதி மறுமுறை கலெக்சனுக்கு செலுத்தினேன். **(கடந்த 12.05.2022- ந் தேதியிட்ட பஞ்சாப் நேஷனல் வங்கி மயிலாடுதுறை கிளையில் நான் கலெக்சனுக்கு செலுத்திய காசோலை பொறுத்து "(Payment stopped by drawer)" என்ற குறிப்புடன் எனக்கு வழங்கப்பட்ட ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ. 03 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 17.05.2022- ந் தேதியிட்ட நான் எனது வழக்கறிஞர் மூலம் பணத்தை திருப்பி தர வேண்டி எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ. 04 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 19.05.2022-ந் தேதியிட்ட நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ- 05 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மனுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

(ஒம்/- S. விஜய் ஆனந்த்)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் (மு.கூ.பொ.), நன்னிலம்.